சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 01.12.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 6/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-15 |
| சாட்சியின் பெயர் | : | நடராஜசேதுபதி |
| தந்தை பெயர் | : | சுதானந்தம் |
| கிராமம் | : | திருவாரூர் |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | அறுவை சிகிச்சை நிபுணர் |
| வயது | : | 40 |

2025 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 01 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1,2 எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்ட அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இளநிலை அறுவை சிகிச்சை நிபுணராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.09.2022 ஆம் தேதி சுமார் இரவு 9.30

மணியளவில் குடவாசல், புதுக்குடியை சேர்ந்த ஜெயபால் மகன் அ.சா-2 தங்கமணி என்பவரை அப்போது பணியிலிருந்த பணி மருத்துவராக இருந்த மருத்துவர் அ.சா-11 சிவராமன் என்பவர் உள்நோயாளியாக அனுமதித்திருந்தார். அவரை அன்றைய தினம் 9.40 மணியளவில் சிகிச்சை அளிக்கும் பொருட்டு அவரை நான் பார்வையிட்டதில் தன்னை தெரிந்த ஒரு நபரால் இரும்பு கம்பியால் தன்னை தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதனை செய்தபோது அவருக்கு தலையில் இடதுபுறத்தில் 6x2x0.5 cm வெட்டுக்காயம் இருந்தது. வலது ஆட்காட்டி விரல் நகம் சிதைந்து காணப்பட்டது. அவரது மூளை பகுதியை CT ஸ்கேன் எடுக்க வேண்டும் என்றும், வலது கையில் உள்ள காயத்தை பொறுத்து நுண்கதிர் படம் எடுக்க வேண்டும் என பரிந்துறை செய்தேன். ஆனால் கடந்த 30.09.2022 ஆம் தேதி இரவு 12.30 மணிக்கு அவர் மருத்துவமனையிலிருந்து தொடர் சிகிச்சை எடுத்துக்கொள்ளாமல், எந்த தகவலும் தெரிவிக்காமல் வெளியே சென்றுவிட்டார். இதனால் மேற்படி காயத்தின் தன்மை குறித்து என்னால் கருத்து கூற இயலவில்லை. காயம் பட்ட நபர் மருத்துவமனையிலிருந்து தலைமறைவாகிவிட்டார் என்று சான்று வழங்கினேன். அந்த சான்றிதழ் **அ.சா.ஆ-11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலீசார் விசாரணை செய்தார்கள் விவரம் சொன்னேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u> இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.12.01 17:47:02 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.